# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
முதலாம் தவணைப் பரீட்சை - 2021
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 1st Term Examination - 2021

FWC

| | | |
|---|---|---|
| புவியியல் - I<br>Geography - I | Three Hours<br>Gr -12 (2022) | 22 \| T \| I |

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

***1 – 20 வரையான பல்தேர்வு வினாக்களுக்குரிய சரியான பொருத்தமான விடைகளை அடைப்புகுறிக்குள் உள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.***

01. புவியியலில் தகவலை முன்வைப்பதற்குப் பயன்படும் விசேட நுட்பமுறை
    1) விவரணம் செய்தல்
    2) உதாரணங்களுடன் எடுத்துக்காட்டுதல்
    3) படம் மூலம் விளக்குதல்
    4) கலந்துரையாடி விவரணம் செய்தல்
    5) விவரணமூடாக விளக்கமளித்தல் (………)

02. பௌதிக அடிப்படை, மானிட செயற்பாடுகள் தகவலைச் சேகரித்தல், முன்வைத்தலுக்கு புவியியலில் முக்கியம் பெறுவது
    1) அறிக்கைப்படுத்தல்
    2) விளக்கமளித்தல்
    3) படங்களுடாக விளக்குதல்
    4) களப்பயணம்
    5) துறைசார் வல்லுனர்களைச் சந்தித்தல் (………)

03. பல ஆண்டுகளில் ஏற்றுமதி, இறக்குமதி தொடர்பான தரவுகளை எடுத்துக்காட்டுவதற்கு பொருத்தமான வரைபு
    1) கோட்டுநிரல் வரைபடம் 2) பார் வரைபடங்கள் 3) இடக்கணியப்படங்கள்
    4) சம கணியப் படங்கள் 5) புள்ளிப்படங்கள் (………)

04. இலங்கையில் 1:50,000 என்ற அளவுத்திட்டத்திலமைந்த இடவிளக்கப்படத்தாள்களின் எண்ணிக்கை
    1) 72 2) 82 3) 88 4) 90 5) 92 (………)

05. புவியியல் தகவல் முறையில் தரவுகளை எண்ணிலக்கமுறையாக (Digital) மாற்றி கணினிக்கு உள்ளீடு செய்யும் உபகரணத்தில் ஒன்று
    1) விசைப்பலகை 2) திரை 3) அச்சுஉபகரணம்
    4) சுட்டி 5) தொலையுணர்வு மேடைகள் (………)

06. புவிமேற்பரப்பின் பரப்பு ரீதியான வேறுபாடுகளைக் கற்றல் என புவியலுக்கு வரைவிலக்கணத்தினை முன்வைத்த அறிஞர்.
    1) கால்ரிட்டர் 2) வொன்கம்போல்ட் 3) ரிச்சட் ஹாட்சோன்
    4) மக்கின்டர் 5) அரிஸ்ரோட்டில் (………)

07. புவியியல் என்றால்
1) புவி பற்றிய விவரணம்
2) ஞாயிற்றுத் தொகுதி பற்றிய விவரணம்
3) கடல் பற்றிய விபரணம்
4) மனிதனுடைய கூர்ப்பு கொள்கை தொடர்பான விபரணம்
5) சூழல் தொடர்பான விபரணம் (.........)

08. கால் ரிட்டர் முன்வைத்த வரைவிலக்கணத்தின் படி புவியியல் என்பது
1) சூழலுக்கு இடையிலான தொடர்பினை விவரிக்கின்றது.
2) மனிதனுக்கும் சூழலுக்கும் இடையிலான தொடர்பினை விபரிக்கின்றது.
3) மனிதனுடைய நாகரிக ரீதியிலான வளர்ச்சியினை எடுத்துக் காட்டுகின்றது.
4) மண்பற்றி விபரிக்கின்றது.
5) காலநிலைக்கும் மண்ணிற்கும் இடையிலான தொடர்பினை எடுத்துக் காட்டுகின்றது. (.........)

09. புவியின் பௌதிகச் சூழலை துரிதமாற்றத்திற்குள்ளாகும் அகவிசைச் செயற்பாடு காரணமாக ஏற்படுகின்ற இயற்கை இடர்கள்
1) சூறாவளி, மண்சரிவு
2) வரட்சி, வெள்ளப்பெருக்கு
3) பனிமலைச் சரிவு, காட்டுத்தீ
4) புவிநடுக்கம், எரிமலைவெடிப்பு
5) தொற்று நோய்பரவல், விபத்துக்கள் (.........)

10. சூழலின் விசேடமான உயிரி
1) மண் 2) காலநிலை 3) மழைவீழ்ச்சி
4) இயற்கைத்தாவரம் 5) மனிதன் (.........)

11. சமுத்திர அகழிகள் மத்திய சமுத்திரப்பாறைத் தொடர்கள் உருவாவது
1) இழுவிசையினால் 2) அமுக்க விசையினால் 3) மலையாக்க விசையினால்
4) கண்டவாக்கவிசையினால் 5) புறவிசையினால் (.........)

12. அயனப்பிரதேச நில உருவாக்கச் செயற்பாடுகளுக்குக் காரணமான உரிவுக்கருவி
1) வெப்பம் 2) பனி 3) காற்று
4) ஓடும் நீர் 5) தரைக்கீழ்நீர் (.........)

13. ஓடும் நீரினால் உருவாகும் அரித்தல் நிலவுருவங்களில் ஒன்று
1) வெள்ளச் சமவெளி 2) கழிமுகம் 3) நீர்வீழ்ச்சி
4) குத்துப்பாறைவாற்குன்று 5) செம்மறியுருப்பாறை (.........)

14. உருமாறிய பாறை என்பது
1) கனியங்களின் இரசாயனச் சேர்க்கையால் உருவான பாறைவகை
2) மக்கமாவினால் உருவானது
3) கனியங்களின் படிதலினால் உருவானவை
4) உருமாற்றத்திற்குட்பட்ட பாறைகள்
5) பாறைகளிலுள்ள கனியங்கள் உருமாற்றமடைவதனால் உருவாகிய பாறைகள் ஆகும் (.........)

15. புவியின் கற்கோளம், வளிக்கோளம், உயிர்க் கோளம் என்பவற்றினை ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்துவது
1) மண் 2) நீர் 3) காற்று
4) தரைத்தோற்றம் 5) மழைவீழ்ச்சி (.........)

16. பொருளதாரப் புவியியலின் உபபிரிவு
1) மண்ணியல் 2) காலநிலையியல் 3) நீரியல்
4) சந்தைப்படுத்தல் 5) புவிச்சரிதவியல் (.........)

17. விவசாயத்திற்கு அதிகளவு நிலப்பகுதி பயன்பத்தப்படுவது
1) நகரங்களில் 2) குக்கிராமங்களில் 3) கிராமங்களில்
4) கிராமாந்தரப் பகுதிகளில் 5) புறநகரப்பகுதிகளில் (………)

18. ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் இரும்புருக்குக் கைத்தொழிலின் இடவமைவைத் தீர்மானித்த காரணி
1) நிலக்கரி 2) போக்குவரத்து 3) தொழிலாளர்
4) சந்தை 5) அரச கொள்கை (………)

19. நகரப் பகுதிகளில் அதிகளவில் விருத்திஅடைந்திருப்பது
1) கைத்தொழில், சேவை 2) விவசாயம், சேவை 3) விவசாயம், மீன்பிடி
4) மீன்பிடி, காடாக்கம் 5) கைத்தொழில், விவசாயம் (………)

20. கிராமப்பகுதிகளில் காணப்படும் குடியிருப்பு
1) நேர்கோட்டுக் குடியிருப்பு 2) சந்திக்குடியிருப்பு 3) சந்தைக் குடியிருப்பு
4) சிதறிய குடியிருப்பு 5) தோட்டக்குடியிருப்பு (………)

(20 x 1 = 20 புள்ளிகள்)

## பகுதி – II

## பகுதி - A

**பகுதி A இல் தரப்பட்ட இரண்டு வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**

01) (i) 1 : 50,000 என்ற அளவுத்திட்டத்திற்குரிய நேர்கோட்டு அளவுத்திட்டத்தினை வரைக. *(02 புள்ளிகள்)*

(ii) பின்வரும் பௌதிக அம்சங்களை உரியநிறத்தினைப் பயன்படுத்திவரைக.
I. கூம்புக்குன்று
II. கணவாய்
III. பள்ளத்தாக்கு
IV. சுவடு
V. மியாந்தர் வளைவு *(10 புள்ளிகள்)*

(iii) பின்வரும் பண்பாட்டம்சங்களுக்கு 1:50,000 என்ற இடவிளக்கப்படங்களில் பயன்படுத்தப்படுகின்ற குறியீடுகளை உரிய நிறங்களைப் பயன்படுத்தி வரைக..

I. நெல்வயல்
II. வீட்டுத்தோட்டம்
III. இறப்பர்
IV. தென்னை
V. தேயிலை *(05 புள்ளிகள்)*

(iv) இடவிளக்கப்படங்களின் பயன்கள் மூன்று தருக. *(03 புள்ளிகள்)*

02) தரப்பட்ட உலகப்புறவுருவப்படத்தில் வழமையான குறியீடுகளையும் நிறங்களையும் பயன்படுத்திப் பின்வருவனவற்றைக் குறித்துப் பெயரிடுக.
(i) றொக்கி மலைத்தொடர்
(ii) அமேசன் நதி
(iii) இலண்டன்
(iv) சகாராப் பாலைவனம்

(v) இலங்கை

(vi) மலாக்கா நீரிணை

(vii) மத்திய தரைக்கடல்

(viii) சுயெஸ் கால்வாய்

(ix) உலகம் முழுவதும் Covid 19 பரவடைவதற்குக் காரணமான நாடு

(x) சர்வதேச நெல் ஆராய்ச்சி நிறுவனம் அமைந்துள்ள நாடு

## பகுதி – B

## எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

01)

(i) இடவிளக்கப்படம் என்பதனால் கருதப்படுவது யாது? *(02 புள்ளிகள்)*

(ii) கருப்பொருள் படம் என்பதனால் கருதப்படுவது யாது? *(02 புள்ளிகள்)*

(iii) நவீனபடவரைகலையியலின் பொது இயல்புகள் மூன்றினைச் சுருக்கமாக விளக்குக. *(03 புள்ளிகள்)*

(iv) புவியியல் தகவல் முறைமை (GIS) என்பதனை வரையறை செய்க. (03 புள்ளிகள்)

02) (i) புவியியல் உள்ள கண்டங்கள் நான்கு தருக. *(02 புள்ளிகள்)*

(ii) புவிமேற்பரப்பில் காணப்படும் பாறைகளின் மூன்று வகைகளையும் தருக. *(03 புள்ளிகள்)*

(iii) மண் உருவாக்கக் காரணிகள் நான்கினைக் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

(iv) இக்காரணிகளைச் சுருக்கமாக விளக்குக. *(03 புள்ளிகள்)*

03) (i) வளிமண்டலத்திலுள்ள நிரந்தரமான வாயுக்கள் இரண்டு தருக. *(02 புள்ளிகள்)*

(ii) வளிமண்டலத்தில் மாறுபடும் தன்மையிலுள்ள வாயுக்கள் இரண்டு தருக. *(02 புள்ளிகள்)*

(iii) புவி வெப்பமடைதலில் பங்களிப்புச் செய்யும் வாயுக்கள் இரண்டு தருக. *(02 புள்ளிகள்)*

(iv) வளி மாசடைவதற்கான இரண்டு காரணங்களை உதாரணங்களுடன் விளக்குக. (04 புள்ளிகள்)

04) (i) மானிடப் புவியியல் என்பதனால் கருதப்படுவது யாது? *(02 புள்ளிகள்)*

(ii) பௌதிக நிலத்தோற்றத்தின் வேறுபாடுகளுக்கு ஏற்ப மானிட நிலத்தோற்றம் இடரீதியான வேறுபாடுகளுக்கு உட்படுவதனை இரண்டு உதாரணங்களுடன் விபரிக்குக. *(02 புள்ளிகள்)*

(iii) இலங்கையின் இடரீதியான வேறுபாடுகள் கீழே A,B,C எனத் தரப்பட்டுள்ளன. அப்பகுதிகளில் பிரதானமான பொருளாதார நடவடிக்கைகளைத் தருக.

A- மத்திய மலைநாடு B – உலர்வலயம் C – தெற்மேற்கு தாழ்நிலம் *(03 புள்ளிகள்)*

(iv) இலங்கையின் கரையோரப் பகுதியின் மானிடநடவடிக்கைகளைச் சுருக்கமாக விளக்குக. *(03 புள்ளிகள்)*

05) (i) மானிடப் புவியியலில் உள்ளடங்கும் நான்கு பாடங்களைத் தருக. *(02 புள்ளிகள்)*

(ii) சனத்தொகை என்பதனால் கருதப்படுவது யாது? *(02 புள்ளிகள்)*

(iii) உலகில் சனத்தொகை கூடிய

a. கண்டம்

b. நாடு என்பவற்றைக் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

(iv) சூழல் மாசடைவதற்கான மானிடக் காரணிகள் இரண்டினை உதாரணங்களுடன் விளக்குக.

*(04 புள்ளிகள்)*

## தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும் முதலாம் தவணைப் பரீட்சை - 2021

### தரம் 12 (2022) புவியியல்

